# செயலாற்றுகை அறிக்கை

## சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்

## 2017 ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை

சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்

இல 35ஏ

கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை

பொரல்லை

கொழும்பு 08

**<u>சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் அவர்களின் கோரிக்கை</u>**

சிறுதவறாளர்கள், வாலிப மற்றும் புதிதாய் குற்றச்செயல்களில் ஈடுபடும் தவறாளர்களை வினைத்திறனான சீர்திருத்த செயற்பாட்டிக்கு உட்படுத்தபடும் போது அவர்களை சிறைச்சாலைகளில் அடைப்பதை விட சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துவதே மிகசிறந்தது என்று குற்றவியல்நிபுனத்துவர்கள் மற்றும் தண்டனை கொடுப்பவர்களின் கருத்தாகும்.

எமது திணைக்களத்தின் பிரதான நோக்கம் சிறுதவரூகளுக்காக தண்டனை பெறும் குற்றவாளிக்கு அதற்கு பதிலாக வேறு ஒரு மாற்று சந்தர்பத்தை வழங்குவதேயாகும்.இதன் மூலம் தவறாளர் பாரிய குற்றவாளிகலாவதில் இருந்து பாதுகாக்கப்படுகின்றார்கள்.விசேடமாக இந்த தவறாளரை சிறையில் அடைக்காமல் சமூகத்துடன் வைத்தே சீர்திருத்தம் செய்வது மிகவும் வினைத்திறனான செயலாக அமையும்.

இதனடிப்படையில் எமது திணைக்களம் இன்றைய அறிவியல் சார்ந்த சமூகத்திற்கு அவசியமானதும், தேசத்தின் சமகாலத்திற்கு பொருத்தமான திணைக்களமாகும்.

வி.பிரேமசந்திரன்
ஆணையாளர் (ப.க)
சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| **01.** | **தெளிவுபடுத்தல்** | 03-04 |
| | பணிக்கூற்று | 05-07 |
| | திணைக்கள அலுவலர்கள் விபரங்கள் | 07-08 |
| 01.3 | இலங்கையில் சமுதாயஞ்சார் சீர்திரத்தம் உருவாக்குதல் | 09 |
| 01.4 | சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டம் | 10-13 |
| **02.** | **சீர்திருத்த நிகழ்ச்சிகள்** | 14 |
| 2.1 | சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை | 14-23 |
| 2.2 | நடாத்தப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சிகள் | 24 |
| 2.2.1 | உளவள ஆலோசனை மற்றும் போதை பொருள் நிவாரணி (2016.01.01-2016.12.31) | 25-26 |
| 2.2.2 | அபிவிருத்தி மற்றும் சிரமாதான நிகழ்ச்சி | 27-28 |
| 2.2.3 | சமய வழிபாடு தொடர்பான வேலைத்திட்டம் | 29 |
| 2.2.4 | தொழில் பயிற்சி மற்றும் விவசாய வேலைத்திட்டம் | 30 |
| 2.3 | போதை பொருள் ஒழிப்பு வட மேல் மாகாணம் | 30-32 |
| **03.** | **உத்தியோகத்தர் ஆளுமை** | 33 |
| 03.1 | உத்தியோகத்தர் பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தல் | 33-34 |
| 03.2 | 2016 ஆம் வருடத்தில் பயிற்சிகளுக்காக செய்த செலவு | 34-35 |
| 03.3 | மீண்டு வரும் செலவினம் | 36 |
| **04.** | **எதிர்கால திட்டம்** | 36-37 |

## 01.தெளிவுபடுத்தல்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை மற்றும் குற்றங்கள் சம்பந்தமான காரியாலயத்தின் 2013 ஆண்டு அறிக்கையின் அடிப்படையில அறிவியல் சார்ந்த உலகில் பல்வேறு பரிசோதனைகளின் முடிவின் பிரகாரம் திரும்ப திரும்ப சிறைச்சாலை செல்வதற்கான வீதத்தை குறைப்பதற்கு மாற்று தண்டனை முறையை கையாள்வதின் மூலம் சிறைச்சாலை செல்லும் வீதத்தை குறைக்கலாம்.அத்தோடு சிறைச்சாலைகளில் உள்ள சனநெருக்கடியையும் குறைப்பதற்கு ஒரு காரணமாகலாம்.பல நீதிமன்றங்களில் சமுதாயஞ்சார் சீர்திருத்த முறை மிகவும் பிரசித்தி அடைந்துள்ளது.இதற்கு காரணம் கட்டளை பெற்ற தவறாளர் மூலம் சமூகத்துக்கு இழைக்கப்படும் அநீதியிலிருந்து பாதுகாக்கப்பட்டு சமூகமயப்படுத்தலின் மூலம் சமூகத்திற்கு அர்த்தமுள்ள சில விடயங்களை செய்வதாகும்.இதனால் இந்த மாற்று தண்டனை முறை தண்டனை அல்லது ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனையை விட பாரிய தண்டனையாக கருதப்படுகின்றது.(ஐக்கிய நாடுகளின் போதை வஸ்த ஒழிப்பு நிறுவனம் 2013)

இன்றைய காலத்தில் ஒரு குற்றவாளியை சிறைச்சாலையில் அடைத்து சீர்திருத்தம் செய்வதை விட சமூகத்துடன் இணைந்தே தவறாளறுக்கு தண்டனையுடன் சீர்திருத்தம் செய்யும் முறையே உலகில் பிரசித்தி பெற்றுள்ளது. (திசாநாயக்க 2013). 1999 இல் சமுதாயஞ்சார் சீர்திருத்த முறை ஒரு செயற்திட்டமாக நீதி அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.இதனடிப்படையில் 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாயஞ்சார் சீர்திரத்த சட்டம் உருவாக்கப்பட்டு சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்திட்டம் 3 நீதிவான் நீதிமன்றங்களில் ஆரம்பிக்கப்பட்டது.இந்த செயற்திட்டம் 2008 ஆம் ஆண்டு நீதி அமைச்சின் கீழ் திணைக்களமாக மாறியது.இன்று நாடளாவியரீதியில் 125 சுற்றுளா மற்றும் நீதிவான் நீதிமன்றங்களில் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் நடைபெறுகின்றது.

சமுதாயஞ்சார் சீர்திரத்த சட்டத்தின் அடிப்படையில் குறைந்தபட்ச தண்டனையாக சிறை தண்டனை விதிக்கப்படாத குற்றம் அல்லது

இரண்டு ஆண்டுகளை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனையை உள்ளடக்குகின்றதோ,அத்தவறு தவிர்ந்த வேறொரு தவறுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து,நீதிமன்றமானது அத்தகைய தவறாளி மீது மறியற்றண்டனைத் தீர்ப்பு ஒன்றை அல்லது இடைநிறுத்தி வைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பு ஒன்றை அல்லது குற்றப்பணமொன்றை விதிப்பதற்குப் பதிலாக சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையொன்றை வழங்கலாம். இதனடிப்படையில் சட்டத்தின் பிறகாரம் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையின் தேவை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அத்தோடு

- கட்டளையாளர்களின் குற்றச்செயற்பாடு சம்பந்தமான தகவல்களை மதிப்பெடுப்பதற்கும்.
- போதை பொருட்களுக்கு அடிமையான தவறாளிகளின் அடிமைத்தனத்தின் தாக்கத்தை புரிவதற்கும் மற்றும் அதற்காக அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கும் மற்றும் தேவையான நடவடிக்கைகளை செய்வதற்கும்.
- தவறாளர்களின் குற்றசெயற்பாடுகளை குறைப்பதற்கான இயன்ற அளவில் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற செய்ய வேண்டும். (கார்டர் 1998)

தவறாளர் ஒருவர் சிறைச்சாலை செல்வதால் அவரினால் சமூகத்திற்கு பாரிய சிக்கல் ஏற்படுகின்றது.சிறு தவறாளர் சிறைச்சாலையில் அடைக்கப்படுவதால் சிறையிலுள்ள பாரிய குற்றவாளிகளுடன் தொடர்புபடுவதால் அவர்களும் பாரிய குற்றவாளிகளாக மாறி சமூகத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடுவார்கள் என கருதப்படுகிறது.குடும்பத்திற்கு உழைத்து கொடுக்கக் கூடியவர்கள் சிறைச்சாலைகளில் அடைகக்படுவதால் அவர்களின் குடும்பத்தில் பாரிய பொருளாதார பிரச்சினை ஏற்படுகின்றது. அத்தோடு பொருளதார சிக்கல்களில் இருந்து விடுபட பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்.மேலும் பாடசாலை செல்லும் பிள்ளைகள் பள்ளி படிப்பை விட்டு விட்டு தொழில்களில் ஈடுபடுகின்றனர்.அத்தோடு சிறைச்சாலையில் அடைக்கப்படுபவர்களுக்காக அரசு பாரிய நிதியை செலவு செய்கின்றது.மேலும் இதனால் சிறைச்சாலைகளில் சனநெருக்கடியையும் ஏற்படுத்துகின்றது.சிறு தவறாளர்களுக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை பெற்றுக்கொடுப்பதனால் சிறைச்சாலை சன நெருக்கடியையும் அரசு செலவு செய்யும் பாரிய செலவையும் குறைக்க முடியும். நீதிமன்றத்தினால் சிறு தவறாளரான ஒருவருக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் சிறு தவறாளிகளின் குற்ற செயற்பாட்டை மாற்ற முடியும்.மற்றும் சமூகத்தில் வைத்தே சீர்திருத்தம் செய்து சிறந்த பிரசையாக மாற்ற முடியும்.

## தூர தர்சன நோக்கு

சிறுதவறாளர்கள் மற்றும் தவறுகள் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படும் நபர்களை நற்பிரசையாக மாற்றுதல்

## பணிக்கூற்று

பின்னூற்றல் செயற்பாட்டை மேற்கொள்வதன் ஊடாக சிறு தவராளர்கள் மற்றும் தவறுகள் செய்வார்கள் என எதிர்பார்கப்படும் குழுவினரின் குடும்ப பொருளாதார,ஆண்மீக மற்றும் சமூகரீதியிலான அபிவிருத்தியை சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் செயற்பாட்டின் ஊடாக மேம்படுத்தல்.

## உற்சாகமூட்டல்

**இருக்கும் வளங்களை இயன்ற அளவு உபயோகித்தல்**

**நிர்மான திறமை**

**குழுக்களுக்கு இடையே புரிந்துனர்வு**

**நிரந்தர முன்னேற்றம்**

**பொறுப்பு**

## 01.1 நோக்கம்

1 **1999** ஆம் ஆண்டின் **46** ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தை செயல்படுத்துவதன் ஊடாக சிறு குற்றங்களை புரியும் தவறாளர்களை சிறைச்சாலை செல்வதை தவிர்பதும் சமூகத்தில்வைத்தே அவர்களை சீர்செய்வதுமாகும்.

2 சிறு குற்றங்களை புரியும் தவறாளர் ஒருவர் சிறைச்சாலை செல்வதை தடுப்பதும் சிறைச்சாலைகளில் உள்ள சன நெறுக்கடியையும் இதனால் அரசுக்கு ஏற்படும் செலவுகளை கட்டுபடுத்துவதும் ஆகும்.

3 சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களின் உழைப்பை தேசத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்துதல்.

4 சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களை உளரீதியாக மற்றும் ஆண்மீகரிதீயாக முன்னேற்றத்திற்காக செயல்படுவது.

5 தவறுகள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுபவர்கள் மற்றும் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை பெற்றவர்களின் குடும்பத்தவர்களின் பொருளாதார மற்றும் ஆன்மீகரீதியில் முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்.

### சேவைகள் /திட்டங்கள்

1. சிறு தவறுகள் செய்யும் நபர்களுக்கு நீதிமன்றங்கள் மூலம் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உற்படுத்தல்.
2. கட்டளையாளர்களின் கல்வி அபிவிருத்தி மற்றும் ஆண்மீக வளர்ச்சிக்காக அபிவிருத்தி நிகழ்சிகளை நடாத்துதல்.
3. கட்டளையாளர்களின் உளவளத்திற்காக மற்றும் தேக ஆரோக்கியத்திற்காக உளவள ஆலோசனை நிகழ்சிகளை நடாத்துதல்.
4. கட்டளையாளர்களின் விசேட திறண்கள் மற்றும் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக தொழில் பயிற்சிகளை நடாத்துதல்.
5. கட்டளையாளர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தல்.
6. கட்டளையாளர்களை போதை பொருள் பாவனையில் இருந்து விடுபட மருத்துவ சிகிச்சைகளுக்க உற்படுத்தல்.
7. ஆக்கத்திறணான நிகழ்சிகளை நடாத்துதல்.

### நிறுவனத்தின் முதலிடம்

1. சிறந்த புனரவாழ்வு மற்றும் மருத்துவ சிகிச்சைகள் மூலம் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களை சிறந்த பிரசைகளாக மாற்றுவது.
2. மணித வளத்தை அபிவிருத்தி செய்வது


ஆணையாளர்
பிரதி/ உதவி ஆணையாளர் அபிவிருத்தி
பிரதி/ உதவி ஆணையாளர் நிர்வாக
கணக்காளர்
சி ச சி உ
சி ச சி உ தலைமையகம்
நிர்வாக உத்
மொழிபெயப்பாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
சிஉ
வேலை பரி
அபிவிருத்தி
அபிவிருத்தி உ வேலைதிட்ட உதவி
முக உ
க உ
நிர்வாக
கணனி உ.
முக உ
எழுதுன
ஓட்டுனர்
க உ
கணக்கு பிரிவு
முக உ
எழுதுனர்
க உ

**சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் 2012.12.31 திகதியின் உத்தியோகத்தர்கள் விபரம்**

| | புதவி | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர் தொகை | தற்சமயம் உள்ள உத்தியோகத்தர் தொகை |
|---|---|---|---|
| 1 | சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் | 01 | … |
| 2 | உதவி மற்றும் பிரதி ஆணையாளர் | 02 | 01 |
| 3 | கணக்காளர் | 01 | 01 |
| 4 | சிரேஸ்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் | 10 | 02 |
| 5 | மொழிபெயப்பாளர் தமிழ் | 01 | …. |
| 6 | சமுதாயஞ்சார் சீர்திரத்த உத்தியோகத்தர் | 112 | 107 |
| 7 | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 000 |
| 8 | வேலைதிட்ட உதவியாளர் | 04 | 02 |
| 9 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 328 | 265 |
| 10 | கணனி உதவியாளர் | 02 | 01 |
| 11 | எழுதுனர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் | 20 | 10 |
| 12 | வேலை பரிசோதகர் | 114 | 114 01** |
| 13 | காரியால உதவியாளர் | 08 | 06 |
| 14 | ஓட்டுனர் | 03 | 02 |
| | மொத்தம் | 607 | 511 |

** யுத்ததினால் கொலை செய்யப்பட்ட ஒரு உத்தியோகத்தருக்கு அ.நி.சு படி சம்பளம் கொடுக்கப்படுகிறது.

**01.3 இலங்கையில் சமுதயஞ்சார் சீர்திருத்த செயற்திட்டம் உருவாக்குதல்**

1999 வருடத்தில் நீதி அமைச்சின் கீழ் ஒரு செயற்திட்டமாக இலங்கையில் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் ஆரம்பிக்கப்பட்டது.2000.02.17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திரத்தம் ஒத்திகையையாக 6 நீதிவான் நீதிமன்றங்களில் அதாவது அலுத்கடை,மாலிகாகந்தை,கோட்டை போன்ற நீதிமன்றங்களில் செயற்படுத்தப்பட்டது. 2003 ஆண்டு ஒரு இலாக்காக இருந்து அதன் வெற்றியின் காரணமாக 2008.07.01 நீதி அமைச்சின் கீழ் திணைக்களமாக தரமுயர்த்தப்பட்டது.

நீதி மற்றும் நீதி மறுசிரமைப்பு அமைச்சரின் மூலம் 2000 ஆண்டு முதல் காலத்துக்குகாலம் வெளியிடும் சுற்றறிக்கைகளின் ஊடாக நீதிமன்றங்களில் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் செயற்படுத்தப்பட்டது. இதனடிப்படையில் ஆரம்பாக கொழும்பு மற்றும் கோட்டை நீதிமன்றங்களில் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் செயற்படுத்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.இதனடிப்படையில் 2001 ஆண்டு 3 நீதிமன்றங்களிலும் 2005 ஆண்டு 5 நீதிமன்றங்களிலும் 2007 ஆண்டு 32 நீதிமன்றங்களிலும் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் விரிவாக்கப்பட்டது.தற்பொழுது 125 நீதிவான் நீதிமன்றங்களில் இயங்குகின்றது.

**01.4 சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டம்**

**1999** ஆம் ஆண்டின் **46** ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தின் மூலம் சிறைச்சாலை செல்வதை தடுத்து அதற்கு பதிலாக நீதிவான் நீதிமன்றங்களினால் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை பிறப்பிப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை ஒன்றை பிறப்பிப்பதற்கான அதிகாரத்தை சட்டத்தின் 5 (1) வசனத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.

மிக இலகுவாக குறிப்பிடுவதென்றால் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையொன்றை பிறப்பிப்பது இரண்டு ஆண்டுகளை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனையை உள்ளடக்குகின்றதோ அல்லது அத்தவறு தவிர்ந்த வேறொரு தவறுக்காக குற்றத்தீர்ப்பளிக்கபடுமிடத்து நீதிமன்றமானது அத்தகைய தவறாளி மீது மறியற்றண்டனைத் தீர்ப்பு ஒன்றை அல்லது இடைநிறுத்தி வைக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பு ஒன்றை அல்லது குற்றப்பணமொன்றை விதிப்பதற்குப் பதிலாக சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையொன்றை விதிக்கலாம்.

பின்வருவன ஆணையாளரின் பணிகளாக இருத்தல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்ட சமுதாய சீர்திருத்த நிலையங்கள் மீதும் அத்துடன் சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரதி ஆணையாளர்கள் மீதும் சமுதாயஞ்சார் சீர்திருத்த உதவி ஆணையாளர்கள் மீதும் அத்துடன் சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் ஏனைய அலுவலர்கள் மீதும் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்;

(ஆ)சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக தோதான குழுக்களுடன்ஒழுங்குசெய்தல்;

(இ)சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகளைப் பெற தவறாளிகளுக்குள்ள தகுதி உடைமை பற்றி நீதிமன்றங்களுக்கு ஆலோசனை வழங்குதல்;

(ஈ)சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளைகளை நிறைவேற்றுவதற்குக் கிடைக்கூடிய வசதிகளை ஆய்ந்தறிதலும் இனம்காணுதலும் அவை பற்றி நீதிமன்றங்களுக்கு ஆலோசனை வழங்குதலும்;

(உ)நீதிமன்றத்தால் ஆக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஒரு சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையுடன் சேர்கப்பட வேண்டிய மிகவும் தோதான நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது விசேட நிபந்தனை தொடர்பாக ஆலோசனை வழங்குதல்;

(ஊ)எந்த தவறாளர்கள் தொடர்பில் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைகள் ஆக்கப்பட்டுள்ளனவோ அந்தத் தவறாளர்கள் மீது கண்காணிப்பு செலுத்துதலும் அவர்கள் மீது விழிப்புக் கவனமும் மேற்பார்வையும் ஒழுங்குசெய்தலும்;

(எ)பிரிவு 14இன் கீழ் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கும் நோக்கத்துடன் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை ஒன்றின் ஏதேனும் நிபந்தனைக்க இணங்கியொழுகத் தவறியமை பற்றி நீதிமன்றத்திற்கு அறிவித்தல்;

(ஏ)அவசியமானவிடத்து சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையொன்றை வேறுபடுத்துவதற்கு விண்ணப்பித்தல்;

(ஐ)சீர்திருத்தக் கோட்பாடுகள் குறிக்கோள்கள் மற்றும் நிகழ்சித்திட்டங்கள் தொடர்பாக சமுதாயக்கல்விக்கு ஏற்பாடுசெய்தல்.

**9.(1)**சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை ஒவ்வொன்றும் விதிதுரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் நிபந்தனைகளைக் கொண்டிருத்தலும்வேண்டும்:-

(அ)கட்டளைவலுவிலிருக்கும்காலப்பகுதியின்போது,தவாறாளர்,குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் மறியற்றண்டனை மூலம் தண்டிக்கப்படலான வேறொரு தவறைப் புரிதலாகாது;

(ஆ)கட்டளைத் தேதியின் பின்னர் எழுபத்திரண்டு மணித்தியாலங்களினுள் குறித்துரைக்கப்பட்டதொரு சமுதாயஞ்சார் சீர்திருத்தத் நிலையத்தினல் தவறாளர் முறைப்படிதனது வருகையைத் தெரிவிக்க வேண்டும்.

(இ)சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலைய பொறுப்பதிகாரியினால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய திகதிகளில் சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் அலுவலருக்கு தவறாளர் முறைப்படி தனது வருகையைத் தெரிவித்தல் வேண்டும் என்பதுடன் அவர் வந்து பார்வையிடக்கூடியதாக இருத்தல் வேண்டும்;

(ஈ)தவறாளர் முகவரியில் தொழிலில் அல்லது தான்புரி தொழிலில் ஏற்படும் ஏதேனும் மாற்றம் பற்றிஅத்தகைய மாற்றம் ஏற்படுவதற்கு ஆக்குறைந்தது ஏழுநாட்கள் முன்னராகவாவது,கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு தவறாளர் அறிவிக்க வேண்டும்;

(உ)சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தின் பொறுப்பதிகாரியின் ஒன்னில் பொதுவனதாக அல்லது குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக வழங்கப்பட்ட அனுமதியாக இருக்கும் அனுமதியுடன் தவிர குறித்துரைக்கப்பட்டதோர் இடப்பரப்பை விட்டு தவறாளர் வெளியே செல்லக்கூடாது;

(ஊ)இரண்டாம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களினால் வழங்கப்பட்ட எல்லாச் சட்டமுறையான விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் பணிப்புகளுக்கும் தவறாளர் கீழ்ப்படிதல் வேண்டும்.

**(2)**நீதிமன்றமானது பின்வரும் நோக்கங்களுக்காக

(அ)தவாறாளரின் குற்றநடத்தைக்குப் பங்களிப்புச் செய்தளவையேனும் தனிப்பட்ட காரணிகளை மதிப்பீடு செய்வதனை இயலச்செய்வதற்காகவும்;

(ஆ)அந்தக் காரிகளை இனம்காண்தற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அதத்துடன் அவசியமாயின் சிகிச்சை பெறுவதற்கும் தவறாளருக்கு ஒரு சந்தர்பத்தை வழங்குவதற்காகவும்;அத்துடன்

(இ)தவறாளர் ஒருவரின் குற்றநடத்தையுடன் நேரடியாகத் தொடபுபட்ட விடயங்களில் தேவைகளைக் கொண்டுள்ள தவறாளர்கள் அந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கு இயலச்செய்வதற்காகவும்;

பின்வரும் ஒரு அல்லது பல நிபந்தனைகளை சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளை ஒன்றுக்குச் சேர்க்கலாம்;-

I. நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதிகு கட்டளையில் குறித்துரக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தின் பொறப்பதிகாரியினால் பணிக்கப்பட்டவாறாக தவறாளர் கொடுப்பனவற்ற சமுதாய வேலையைச் செய்தல் வேண்டும்;

II. ஆணையாளரினால் பதவிப் பெயர் குறிக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் அலுவலர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் தவறாளர் இருத்தல் வேண்டும்;

III. நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு ஆணையாளரினால்பணிக்கப்படவாறான கல்விசார் தொழிற்கல்விசார் தனிப்பட்ட பயிற்சி அல்லது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் தவறாளர் பங்குபற்றுதல் வேண்டும் தவறாளர் ஒருவருடைய குற்ற நடத்தையுடன் நேரடியாகத் தொடர்புடைய துறைகளில் அதி உயர்தேவை உள்ள தவறாளர் ஒருவர் அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுமாறு தேவைப்படுத்தப்படலாம்;

IV. நீதிமன்றத்தினால் பணிகப்பட்டவாறாக தவறாளர் மதுபான அல்லது போதைவஸ்து பழக்கத்தை மதப்பீடு செய்துகொள்ளவும் அதற்காகச் சிகிச்சை பெறவும் வேண்டும் அல்லது மருத்துவ உளவியல் அல்லது மனோதத்துவ மதிப்பீட்டுக்கும் பரிகரிப்புக்கும் தம்மை உட்படுத்துதல் வேண்டும்;

V. கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தின் பொறுப்பதிகாரியினால் பணிக்கப்பட்டவாறான தவறளர் மதுபான அல்லது போதைவஸ்துப் பாவனைக்கான பரிசோதனைக்குத் தம்மை உட்படுத்துதல் வேண்டும்;

VI. கட்டளையானது ஆக்கப்பட்டதற்கான நோக்கங்களைக் கருத்திக்கொண்டு நீதிமன்றம் அவசியமானதென அல்லது விரம்பத்தக்கதென கருதும் வேறு ஏதேனும் நிபந்தனை

## 02.சீர்திருத்த திட்டம்

### 2.1 சமுதாயஞ்சார் சீர்திரத்த கட்டளை

| மாகாணம் | தவறாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 5161 |
| மத்திய | 876 |
| தெற்கு | 2390 |
| வடக்கு | 1655 |
| கிழக்கு | 656 |
| வட மேல் | 1721 |
| வட மத்தி | 876 |
| ஊவா | 420 |
| சப்ரகமுவ | 1139 |




மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் அதிக கட்டளையாளர்கள் மேல் மாகாணத்திற்கு உரியது.குறைந்த எண்ணிக்கையான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றது வட மத்திய மாகாணத்தில் ஆகும். மத்திய மாகாணத்தின் கட்டளையாளர்களின் எண்ணிக்கை ஊவா மாகாணத்தின் கட்டயைாளர்களின எண்ணிக்கையின் இரு மடங்காகும்.தென் மற்றும் ஊவா மாகாணத்தின் கட்டளையாளர்களின் எண்ணிக்கையின் இரு மடங்காகும்.

| | | | |
|---|---|---|---|
| ஹெரோயின் | 2983 | 20.83 | 64.92 |
| கஞ்சா | 1813 | 12.66 | |
| சட்டவிரோத மது | 4503 | 31.44 | |
| பொதுமக்கள் தொல்லை | 1473 | 10.28 | |
| திருட்டு | 517 | 3.61 | |
| ஏமாற்றுதல் | 38 | 0.27 | |
| சட்டவிரோத ஆயதம் | 9 | 0.06 | |
| களவாடபட்ட பொருட்களை தன்வசம் வைத்திருத்தல் | 27 | 0.19 | |
| சுதாட்டம் | 1218 | 8.50 | |
| கலகம் | 63 | 0.44 | |
| இதர | 1680 | 11.73 | |
| மொத்தம் | **14324** | **100.00** | |

கட்டளையாளர்களின் 65% அதிகமானோர் சட்ட விரோத மதுபாணம் மற்றும் ஹெரோயின் மற்றும் கஞ்சா போன்றவற்றுக்கு அடிமையானவர்கள்.







மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் அதிக கட்டளையாளர்கள் திருமணம் செய்தவர்கள் மற்றும் திருமணம் செய்யதவர்கள் முழு கட்டளையாளர்களில் 68%. என்றாலும் குடும்பத்துக்கு உழைத்து கொடுப்பவர்கள் சிறைச்சாலையில் அடைக்கபடுவதால் குடும்பத்தின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைகின்றது.ஆதலால் கணவனோ மனைவியோ குடும்பத்தை நடாத்துவதற்கு குற்றச்செயல்களுக்கு ஆளாகின்றனர்.




மேற்படி தகவள்களின் அடிப்படையில் அதிகமான கட்டளையாளர்கள் ஆண்களே மிக குறைந்த எண்ணிக்கையினரே பெண்கள்.அதிகாமான தவறாளர்கள் ஆண்கள் என எமக்கு புலப்படுகின்றது.




மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் அதிக கட்டளையாளர்கள் 7-9 ஆண்டு வரை மட்டுமே பாடசாலை கல்வியை பெற்றுள்ளார்கள்.2017 வருடத்தில் இது 24.8% ஆகவும்.இரண்டாவதாக க.போ ச/த வரை கல்வியை பெற்றுள்ளனர். க.போ உ/த வரை கல்வியை கற்றவர்கள குறைவாகவே உள்ளனர். அது 2017 ஆண்டு 5.1% ஆகும்.2017 ஆம் ஆண்டு பாடசாலை செல்லாதவர்களின் வீதம் 6.7% ஆகும்.இதனடிப்படையில் தரவுகளின் படி க.போ ச/த தரத்திற்கு கீழ் கல்வி கற்றவர்களின் வீதம் 71.7% ஆகும். தரவுகளின் படி அதிகமான கட்டளையாளர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.இதனடிப்படையில் குறைந்த கல்வியறிவை கொண்டவர்கள் தவறான செயற்பாடுகளில் ஈடுபடும் வாய்ப்பு அதிகமாக உள்ளது என கண்டரியப்பட்டுள்ளது.




2017 மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் அதிக கட்டளையாளர்கள் கூலி தொழிலாளர்களாகவே இருக்கின்றனர்.அத்தோடு தற்காலிய தொழில் செய்யகூடியவர்களும் இருக்கின்றனர்.2017 ஆண்டு நிரந்தர தொழில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை தொழில் செய்யதவர்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்காகும். என்றாலும் 2017 ஆம் ஆண்டு நிரந்தர தொழில் செய்பவர்களின் வதும் 15% ஆகும். இதனடிப்படையில் அதிகமான கட்டளையாளர்கள் கூலி தொழிலாளர்கள் மற்றும் தற்காலிய தொழிலாளர்கள் மற்றும் தொழில் அற்றவர்கள் முறைப்படி 56%,25%,4% ஆகும்.என்றாலும் அதிகமான வீதத்தை 85% கொண்டுள்ளது.மேற்படி தகவள்கள் அடிப்படையில் சரியான பொருளாதார நிலை இல்லாதவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு அதிகம்.



மேற்படி வரைபடத்தின் அடிப்படையில் அதிக கட்டளையாளர்கள் வயது 23-32 ஆகும்.இதனால் எமக்கு புலப்படுகின்றது அதிகமான வாலிப வயதுடையவர்கள் தமது ஒரே வயதனவர்களின் ஆதிக்கத்தால் மற்றும் சரியான தொழில் இல்லாமை மற்றும் சிறு வயதில் திருமணம் செய்வதால் தமது குடும்பத்தை சரியான முறையில் நடாத்த முடியாத காரணத்தால் இவ்வரான குற்றச்செயல்கள் செய்வதற்கு தயாராகின்றார்கள்.மேலும் வயது 18-22,23-32,33-37,38-42 உள்ளவர்களே அதிகமான குற்றச்செயல்களில் ஈடுபடுகிறார்கள் ஆதலால் இவர்களினால் குடும்ப பொருளாதார,ஆண்மீக மற்றும் சமூகரீதியிலான அபிவிருத்திக்கு பாரிய வீழ்ச்சி காணப்படுகின்றது.

## 2016-2017 வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளையாளர்களின் எண்ணிக்கை மேல் மாகாணம்




2017 ஆம் ஆண்டின் தரவுகளின் அடிப்படையில் சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாட்டிற்கு அதிகளவிலான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றது மேல் மாகாணத்தில் ஆகும்.அத்தோடு ஹெரோயின் சம்பந்தமான அதிகளவிளான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றிருப்பதும் மேல் மாகாணத்தில் ஆகும். 2016 ஆம் ஆண்டு சட்டவிரோத மதுபாணம் சம்பந்தமான கட்டளையாளர்கயே அதிகமாக கிடைக்கப்பெற்றது.2017 ஆம் ஆண்டு ஹெரோயின் சம்பந்தமான அதிகளவிளான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளது. 2017 ஆம் ஆண்டு களவு சம்பந்தமான குற்றங்கள் அதிகரித்துள்ளன.

**2016-2017 வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளையாளர்களின் எண்ணிக்கை மத்திய மாகாணம்**




2016,2017, ஆண்டுகளில் மத்திய மாகாணத்தில் சட்ட விரோத மதுபானம் சம்பந்தமான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர்.மேலும் 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களில் பொது மக்களக்கு இடையூறு விளைவித்தல் சம்பந்தமான அதிக கட்டளையாளர் கிடைக்கப்பெற்றனர்

**2016-2017 வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளையாளர்களின் எண்ணிக்கை தென் மாகாணம்**




2016,2017, ஆண்டுகளில் தென் மாகாணத்தில் சட்ட விரோத மதுபானம் சம்பந்தமான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர்.மேலும் 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களில் பொது மக்களக்கு இடையூறு விளைவித்தல் சம்பந்தமான அதிக கட்டளையாளர் கிடைக்கப்பெற்றனர்

**2016-2017வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளையாளர்களின் எண்ணிக்கை சப்ரகமுவ மாகாணம்**




2016,2017, ஆண்டுகளில் சப்ரகமுவ மாகாணத்தில் சட்ட விரோத மதுபானம் சம்பந்தமான கட்டளையாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர்.மேலும் 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களில் சப்ரகமுவ மாகாணத்தில் சூது விளையாட்டு மற்றும் இதர தவறுகள் அதிகமாக காணப்படுகின்றன.

**2016-2017 வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளையாளர்களின் எண்ணிக்கை கிழக்கு மாகாணம்**




இந்த மாகாணத்திலும் பொது மக்களுக்கு இடையுறு செய்யும் குற்றமும் சட்ட விரோத மதுபானமும் அதிகமாக கணப்படுகிறது.

**2016-2017 வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளையாளர்களின் எண்ணிக்கை வட மேல் மாகாணம்**




இந்த மாகாணத்திலும் சட்ட விரோத மதுபாணம் அதிகளவில் நடைபெறும் குற்றமாகும் இது மற்ற மாகாணங்களுடன் ஒப்பிடும் போது அதிகமாகும்.

**2016-2017 வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டளையாளர்களின் எண்ணிக்கை வட மத்திய மாகாணம்**




இந்த மாகாணத்திலும் சட்ட விரோத மதுபாணம் அதிகளவில் நடைபெறும் குற்றமாகும்.கஞ்சா மற்றும் பொது மக்கள் இடையூறும் சாதரான அளவில் காணப்படுகின்றன.

**பிரதான கூறுகள் 2017**

**14324**
சமுதாயங்சார் சீர்திருத்த கட்டளையாளர்களின் எண்ணிக்கை

**2252** உளவள ஆலோசனை நிகழ்ச்சிகள்

**176** ஆன்மீக அபிவிருத்தி நிகழ்ச்சிகள்

**850** கொடுப்பனவு அற்ற சமூக வேலை மற்றும் சிரமதானம்

**156** தொழில் பயிற்சி நிகழ்ச்சிகள்

**2280** மருத்துவ சிகிச்சை

**45** வருமானம் ஈட்டும் நிகழ்ச்சிகள்

**2.2 நடாத்தப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சிகள் (2017.01.01 -2017.12.31)**

சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களுக்காக ஆலோசனை வழங்குவது மற்றும் போதை நிவாரனம் மற்றும் ஆன்மீக வளர்ச்சி மற்றும் தொழில் பயிற்சி போன்றவற்றை மேற்கொன்டுள்ளோம்.அவர்களை கொண்டு அனைத்து நீதிமன்றங்களிலும் சிரமதான நிகழ்சிகள் நடத்தியுள்ளோம்.

| **நிகழ்ச்சிகள்** | **எண்ணிக்கை** |
|---|---|
| உளவள ஆலோசனை | **2252** |
| சிரமதானம் | **850** |
| ஆண்மீகம் | **176** |
| தொழில் பயிற்ச்சி | **156** |
| மருத்துவ சிகிச்சை | **2280** |
| விசேட தின நிகழ்ச்சிகள் | **55** |



### 2.2.1 உளவள ஆலோசனை மற்றும் போதை பொருள் நிவாரணி நிகழ்சிகள்

பிரதேச காரியாலயங்கள் மூலம் 27.12.31 வரை உளவள ஆலோசனை மற்றும் போதை பொருள் நிவாரணி நிகழ்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.இதை மாகாணரீதியில் நோக்குவோம்.

| மாகாணம் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 620 |
| மத்திய | 67 |
| தெற்கு | 354 |
| வடக்கு | 360 |
| கிழக்கு | 175 |
| வட மேல் | 165 |
| வட மத்தி | 98 |
| ஊவா | 98 |
| சப்ரகமுவ | 315 |
| **மொத்தம்** | **2252** |




**உளவள ஆலோசனை மற்றும் போதை நிவாரன நிகழ்ச்சிகள்**





**உளவள ஆலோசனை பன்டாரவளை மற்றும் கெகிராவ**





**போஸைவஸ்து ஒழிப்பு நிகழ்ச்சி பத்தேகம**

### 2.2.2 அபிவிருத்தி மற்றும் சிரமாதன வேலைத்திட்டம்

பிராந்திய காரியாலயங்களில் மூலம் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களை தொடர்புபடுத்தி டெங்கு ஒழிப்பு வீதி சுத்தம் செய்தல் மற்றும் அரச கட்டிடங்கள் மற்றும் விகாரைகள் புனர்நிர்மானம் செய்தல் மற்றும் சிரமாதான நிகழ்சிகள் நடாத்தியுள்ளோம். மாகாணரீதியில் அட்டவனைபடுத்தப்பட்டுள்ளது.

| **மாகாணம்** | **நிகழ்ச்சிகள்** |
|---|---|
| மேல் | 178 |
| மத்திய | 64 |
| தென் | 103 |
| வட | 119 |
| கிழக்கு | 65 |
| வட மேல் | 62 |
| வட மத்திய | 27 |
| ஊவா | 99 |
| சப்ரகமுவ | 133 |
| **மொத்தம்** | **850** |






**சிரமதான நிகழ்ச்சி மொனராகலை மற்றும் மட்டக்களப்பு காரியாலயங்களில்**

**2.2.3 சமய வழிபாடு தொடர்பான வேலைத்திட்டம்**

கட்டளைக்கு உட்பட்டவர்களின் உளரீதியான மற்றும் ஆன்மீகரீதியாக அபிவிருத்தி செய்வதற்காக சமயம் தொடர்பான திட்டம்.

| **மாகாணம்** | **தொகை** |
|---|---|
| மேல் | 39 |
| மத்திய | 5 |
| தென் | 19 |
| வட | 10 |
| கிழக்கு | 28 |
| வட மேல் | 22 |
| வட மத்திய | 14 |
| ஊவா | 14 |
| சப்ரகமுவா | 25 |
| **மொத்தம்** | **176** |







**ஆண்மீக நிகழ்சி எல்பிட்டிய மற்றும் மன்னார் காரியாலயம்**





**ஆண்மீக நிகழ்சி பிரதேச காரியாலயம் பத்தேக மற்றும் மாத்தறை**

## 2.2. தொழில் பயிற்சி மற்றும் விவசாய வேலைத்திட்டம்

சகல பிராந்திய காரியாலயங்களிலும் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்பட்டவர்களின் உழைப்பை விவாசாய திட்டங்களில் ஈடுபடுத்தியுள்ளோம்.சில சந்தை பொறுக்களையும் உருவாக்கியுள்ளோம்.அவர்களின் பொருளாதரமும் இதன் மூலம் வளர்ச்சியடைகிறது.தவறாளர்களால் உருவாக்கப்படும் பொருக்களை விற்பதன் மூலம் வரும் வருமானத்தை அரச திரைசேரிக்கு வழங்குகின்றோம்.இதன் மூலம் நாடு அபிவிருத்தியடைகிறது.





**உற்பத்தி பணந்துறை மற்றும் மாத்தறை காரியாலயங்களில்**

## 2.3 போதை பொருட்களுக்கு அடிமையான சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களை சீர்திருத்தம் செய்வதற்கான செயற்திட்டம் வட மேல் மாகாணம்

வடமேல் மாகாணத்தில் கடந்த 05 வருட காலத்தில் சட்ட விரோத மதுபானத்துடன் தொடர்புடைய 10565 பேரும் கஞ்சாவுடன் தொடர்புடைய 460 பேரும் ஹெரோயினுடன் தொடர்புடைய 180 பேரும் கட்டளையாளர்களாக சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாக கிடைத்துள்ளது. 2016 வருடம் வட மேல் மாகாணத்தில் கிடைக்கப்பெற்ற மொத்த சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் 1382 பேர் அதில் 1305 பேர் (94.4%) போதை பொருட்களுடன் தொடர்புபட்ட கட்டளையாளர்கள். இலங்கையில் மற்றய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது பொதைபொருட்களுடன் தொடர்புடைய தவறாளர்கள் அதிகமாக கிடைக்கப்பெற்றிருப்பது வட மேல் மாகாணத்தில் ஆகும்.ஆதலால் இச் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக வட மேல் மாகாணத்தை தெரிவு செய்தோம்.

போதை பொருள் பாவனை செய்யகூடிய தவறாளர்களுக்கு சீர்திருத்த திட்டத்தை செயற்படுத்தும் போது போதை நிவாரண மருத்துவ சிகிச்சை முறையை கையாள வேண்டும் அத்தோடு இம் மருந்து சிகிச்சையை நீண்ட காலமாக போதை பாவனை செய்பவர்களை இணங்கண்டு சிகிச்சை அளிக்கவேண்டும். அவ்வாறில்லையேல் அது பிரயோசனம் அற்றதாகவே அமையும். மேலும் ஹெரோயின் பாவனைக்கு அடிமையானவர்களை சீர்திருத்தம் செய்யும் போது சரியாக திட்டமிடப்பட்டு அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் உளவள ஆலோசனைகள் வழங்கப்படல் வேண்டும்.

02.2016 ஆம் ஆண்டு போதை பொருட்களுக்கு அடிமையான தவறாளர்கள் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாக கிடைத்த விபரம்

| மாகாணம் | தவறு அடிப்படையில் கட்டளை | | | போதை பொருட்களுக்காக கிடைக்கப்பெற்ற கட்டளையாளர்கள் | வருடத்தின் முழு கட்டளை | போதை பொருட்கள் சம்பந்தமான கிடைக்கப்பெற்ற முழு கட்டளையாளர்களின் வீதம்(%) |
|---|---|---|---|---|---|---|
| | ஹேரோயின் | சட்ட விரோத மதுபானம் | கஞ்சா | | | |
| வட மேல் | 17 | 1239 | 49 | 1305 | 1382 | 94.4 |
| மேல் | 1654 | 2160 | 547 | 4361 | 4837 | 90.1 |
| வட மத்திய | 3 | 198 | 46 | 247 | 337 | 73.2 |
| ஊவா | 14 | 198 | 56 | 268 | 391 | 68.5 |
| சப்ரகமுவ | 28 | 588 | 79 | 695 | 1040 | 66.8 |
| மத்திய | 32 | 533 | 114 | 679 | 1207 | 56.2 |
| தென் | 149 | 822 | 160 | 1131 | 2186 | 51.7 |
| கிழக்கு | 12 | 244 | 110 | 366 | 861 | 42.5 |
| வட | 6 | 259 | 272 | 537 | 1711 | 31.4 |

பெற்றது--- சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்

## செயற்திட்டத்தின் நோக்கம்

- ❖ வட மேல் மாகாணத்தின் போதைவஸ்திற்கு அடிமையான சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் 70% ஆனோர் அதிலிருந்து முற்றாக விடுவித்தனர்.
- ❖ வட மேல் மாகாணத்தின் போதைவஸ்திற்கு அடிமையான சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் 750 பேர்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்.

### செயற்திட்டத்தின் ஆக்கபூர்வ திட்டங்கள்

- ❖ போதை பொருட்களுக்காக செலவு செய்யும் பணத்தை தனது குடும்பத்திற்காக செலவு செய்யும் போது அவர்களின் குடும்பம் சமூகரீதியில் உயர்மட்டத்தை அடையும்.
- ❖ போதை பொருட்களுக்காக செலவு செய்யும் காலத்தை வேறு தேவைகளுக்காக செலவு செய்யும் போது அவர் சமூகத்தில் அதிக பிரசித்தி பெற்றவராக மாறுவார் (பொருளாதார விடயம் / ஆண்மீக விடயம் / தனது குடும்பத்துடன் உல்லாசமாக இருத்தல் / சமூக சேவை ஆகியவற்றில் பங்குபற்ற செய்தல்)
- ❖ போதை பொருட்கள் பாவனையில் இருந்து விடுபட செய்வதினால் நல்ல தேகஆரோக்கியம் உள்ள நபராக மாறுவார் மற்றும் குடும்பத்தின் பொறுப்புகளை எடுத்து நடாத்தக்கூடியவராகவும் மற்றம் குடும்பத்தில் உள்ள உறவை உறுதிப்படுத்தல்.
- ❖ வட மேல் மாகாணத்தில் உள்ள 14 நீதிவான் நீதிமன்றங்களில் 15 சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்களும் கட்டளையாளர்களின் கண்காணிப்புக்காக மற்றும் அலுவலக எழுத்து வேலைகளுக்காக 12 வேலை பரிசோதகர்களும் மற்றும் வட மேல் மாகாணத்தில் குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டத்தின் 42 பிரதேச செயலகங்களுக்கும் 42 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இணைப்பு செய்யப்பட்டுள்ளனர்.இந்த உத்தியோகத்தர்களின் உதவியையும் பெறும்படியாக இச் செயற்திட்டம் அமைந்துள்ளது.
- ❖ கட்டளையாளர்களில் அதிகமானோர் சட்ட விரோத மதுபானத்துடன் தொடர்பு பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் அவர்களில் 53.5%மானோர்களின் வயது 18-40ற்கு உற்பட்ட நபர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறான கட்டளையாளர்களை சரியான முறையில் சீர்திருத்தம் செய்து அவர்களுக்கு நல்ல தொழில் முறையையும் சரியான முகாமைத்துவத்தையும் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகிறதது. அவர்களின் வாழ்கையை சீர்திருத்திக்கொள்ள சந்தர்பமும் வழங்கப்பட்டுள்ளது. இக் கட்டளையாளர்களில் 10.8%ஆனவர்கள் தொழில் அற்றவர்கள் 86.7%மானவர்கள் கூலி வேலை செய்வோர். இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பொருளதார ஊக்கிவிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

  மேலும் இவர்கள் போதை பொருட்களுக்கு அடிமையாவதற்கு பிரதான காரணம் சரியான கல்வியறிவு இல்லாமையே. மற்றும் நிரந்தர தொழில் இல்லாத காரணத்தால் ஏதாவது முறையில் பணம் உழைக்கிறார்கள் ஆதலால் போதை பொருள் மற்றும் குற்ற செயற்பாடுகளில் ஈடுபட ஏதுவான காரணியாகும்.

### செயற்திட்டத்தின் வெற்றி

- ❖ வட மேல் மாகாணத்தில் 14 சமுதாயஞ்சார் சீர்திருத்த காரியாலயங்களில் 2017 ஜுன் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை போதை பொருட்களுக்கு அடிமையான சமுதாயஞ்சார் சீர்திரத்த கட்டளையாளர்கள் 825பேர் கிடைக்கப்பெற்றனர் அதில் கட்டளையாளர்கள் 494 பேர்களை மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தினோம். இவ்வறாக மருத்துவ சிகிச்சைக்காக உற்படுத்தப்பட்டவர்களில் 377பேர் முற்றாக போதை பொருள் பாவனையில் இருந்து விடுபட்டனர்.இவ்வாராக போதை பொருள் பாவனையில் இருந்து விடுபட்டவர்கள் வீதம் 76.3% இது நாம் எதிர்பார்த்த வீதத்தை விட அதிகமானதே மருத்துவ சிகிச்சையின் பின்னர் அவர்களுக்கு உளவள ஆலோசனை, குடும்ப அபிவிருத்த திட்டங்கள் ,தொழில் பயிற்சி,

கல்வியறிவு, ஆளுமை வளர்ச்சி நிகழ்சிகள் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் தேவைகேற்ப பெற்றுக்கொடுக்கப்பட்டன.

- முற்றுமுழுதாக போதை பொருள் பாவனை அல்லது விற்பனை செய்தல் போன்ற விடயங்களில் இருந்து விடுபட்ட 117 கட்டளையாளர்களக்கு வாழ்வாதார உதவித் தொகை பிரதேச செயலாளர் ஊடாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் ரூபா மில்லியன் 4.6 பெற்றுக்கொடுக்கப்பட்டது.

இச் சகல விடயங்களின் ஊடாகவும் போதை பொருள் பாவனை காரணமாக உளரீதியாக மற்றும் பொருளதாரரீதியாக அடி பாதாள தளத்திற்கு சென்றிருந்த இவர்களுக்கு தமது குடும்பம் மற்றும் சமூகம் மற்றும் தனது பிள்ளைகளின் முகத்தில் ஒரு சிறிப்பொழியை மீட்டித்தர மற்றும் புதிய எதிர்பார்பை ஏற்படுத்திக்கொடுக்க சமுதாயஞ்சார் சீர்திரத்த திணைக்களத்திற்கு முடிந்தது.













### 3.1 உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி மற்றும் தெளிவுபடுத்தல் நிகழ்சிகள் (01.01.2017-31.12.2017)

திணைக்களத்தை வினைத்திறன் ஆக்குவதற்கு சிறப்பாக தொழிற்படுவதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஒரு சிறந்த பயிற்சி தேவைபடுகிரது எனவே அதற்காக 2017 ஆண்டு முதல் பயிற்சி தேவையானவர்களை இணங்கண்டு வேலை பரிசோதகர் மற்றும் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அதற்கு மேலாக உத்தியோகத்தர்களுக்காக கள பயிற்ச்சிக்கும் பண ஒதுக்கீடு செய்தது. இலங்கை அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் பயிற்சிகள் வளங்கப்படுகின்றன.

**நடாத்தப்பட்ட பயிற்சி மற்றும் உத்தியோகத்தர் தெளிவு கூட்டம்**





**உளவளம் சம்பந்தமான பயிற்சி கோட்டை மற்றும் பானந்துறை**





**அபிவிருத்தி உத்தியோகத்தர் நிகழ்சி கிரிந்த மற்றும் படலகுபுரா**

**3.2 2017வருடத்தில் சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் பயிற்சிகளுக்கான செலவு விபரம்.**

| **உத்தியோகத்தர்** | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆணையாளர் | சி. ச. மு .உத்(மாகாண) | ச மு அ | அபி. உ | கணனி உத | க. உதவ | வே .பரிசோத | எழுதுனர் | ஓட்டுனர் |
| நிகழ்சிகளின் எண்ணிக்கை | **1** | **4** | **7** | **10** | **1** | **8** | **1** | **5** | **1** |
| செலவு | **120,000.00** | **588,167.00** | **54,426.00** | **489,061.00** | **15000.00** | **168,000.00** | **1424,000.00** | **54000.00** | **3000.00** |

**முழு தொகை = ரூபா.3,405,496.00**

## 3.3 மீண்டுவரும்செலவினம்

**கருத்திட்டத்தின் பிரகாரம் மீண்டுவரும் செலவினம் - 2017**

| கருத்திட்ட இலக்கம் / பெயர், ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் சகல கருத்திட்டங்களுக்காகவுமான ஏனைய செலவினம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 236,200,000 | | -2,715,000 | 233,485,000 | 229,524,811 | 3,960,189 |
| ஏனைய செலவினம் | 23,129,000 | 4,510,000 | 2,715,000 | 30,354,000 | 26,729,470 | 3,624,530 |
| **முழு மொத்தம்** | **259,329,000** | **4,510,000** | **0** | **263,839,000** | **256,254,281** | **7,584,719** |

**கருத்திட்டத்தின் பிரகாரம் மூலதனச் செலவினம் - 2017**

| செலவு விடய இல. | விடய இல. | நிதியிடல் (குறியீட்டு இல.) | விடயத்தின் விபரம் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள், குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு | (3) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2) | (4) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| 2001 | | 11 | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள் | 600,000 | | | 600,000 | 58,560 | 541,440 |
| 2002 | | 11 | பொறிஇயந்திர மற்றும் உபகரணங்கள் | 200,000 | | | 200,000 | 62,100 | 137,900 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 200,000 | | | 200,000 | 76,437 | 123,563 |
| 2102 | | 11 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்க | 3,000,000 | | | 3,000,000 | 2,820,472 | 179,528 |
| 2103 | | 11 | பொறிஇயந்திர மற்றும் உபகரணங்கள் | 1,000,000 | | | 1,000,000 | 934,139 | 65,861 |
| 2401 | | 11 | பயிற்சி கொள்திறன் கட்டுமாணம் | 5,000,000 | | | 5,000,000 | 3,202,854 | 1,797,146 |
| 2509 | | 11 | வேறு | 500,000 | | | 500,000 | 384,013 | 115,987 |
| | | | **மொத்தம்** | **10,500,000** | **0** | **0** | **10,500,000** | **7,538,575** | **2,961,425** |

## 4.0 எதிர்கால திட்டம்

01.சமுதாயஞ்சார் சீர்திருத்தம் பற்றி மக்களை தெளிவுபடுத்துவதன் மூலம் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையை அதிகரிக்க செய்ய முடியும் மற்றும் சிறு தவறுகளுக்காக சிறைச்சாலை செல்வதையும் குறைக்கலாம்.

02. தவறுகள் செய்வார்கள் என எதிர்பார்கப்படும் நபர்களை கண்டரிந்து பிரதேச செயலகத்தில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் சீர்திருத்த நிகழ்சிகளை நடாத்துவது

03.சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்களுக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்தம் பற்றிய டிப்ளோமா பாடநெறியை கொடுத்தல்

04.அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் தவறாளர்களின் பின்னூாற்றல் செயற்பாட்டை செய்தல்.

05.திணைக்களத்தின் முன்னேற்றத்தை கண்டரியவதற்கான ஒரு முறையை கண்டரிதல்.

06.போதை பொருட்களுக்கு அடிமையாகி சிறு தவறுகளை செய்யும் கட்டளையாளர்களை சிறந்த பிரசைகளாக மாற்றி அவர்களின் குடும்ப மற்றும் பொருளதாரரீதியில் முன்னேற்றம் அடைய செய்வது.

07.சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களின் தகவள் முகாமைத்துவத செயற்பாட்டை உறுவாக்குதல்.

சமுதயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்
இல 35ஏ
கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை
பொரல்லை
கொழும்பு 08

தொலைபேசி 011-2683691
பக்ஸ் 011-2683675
ஈமெயில் dcbcorrection@gmail.com